பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 14 | திங்கட்கிழமை | 27.05.2024 | அதிர்வு 300

## அடித்தாடுவதா? ஆட்டமிழப்பதா?

### ரணிலே தீர்மானிக்கட்டும் - பஸில்



“தற்போதைய அரசியல் கள சூழ்நிலையில் எவ்வாறு அடித்தாடுவது என்பது 06

# சிங்களத் தலைவர்களின் இன மேலாதிக்க மனோநிலை ஒருபோதும் மாறவேமாட்டாது!

## அதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல என்று சிறீதரன் பதிலடி





(எஸ்.நிதர்ஷன்)

“ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை அதிகாரபூர்வமாக வழங்குவதற்குரிய சந்தர்ப்பங்களைத் தமிழ் மக்கள், சிங்களத் தலைவர்களுக்குப் பலமுறை வழங்கியிருந்தும் அவர்கள் அவற்றைச் சரிவரப் பயன்படுத்த முன்வராமைக்கு, இனமேலாதிக்க மனோநிலையே காரணம். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விதி விலக்கல்ல.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06

# தங்களின் பிரச்சினைகளை ரணிலால்தான் தீர்த்து வைக்க முடியும் என மக்கள் நம்பிக்கை

## முல்லைத்தீவில் ஜனாதிபதி முன்னிலையில் செல்வம் தெரிவிப்பு



(கே.வசந்தன்)


முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பிரச்சினைகளை உங்களால்தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வன்னி மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குக் காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 06

# சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடித்து பிரதம நீதியரசராக்க ஜனாதிபதி தீர்மானம்?



சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இதன்படி, ஆறு மாத சேவை நீட்டிப்பு வழங்குவதற்கான பரிந்துரை ஏற்கனவே அரசமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜுன் முதல் வாரத்தில் நாடாளுமன்றம் கூடும்போது இந்தக் கோரிக்கையை அரசமைப்புப் பேரவை பரிசீலிக்கும் என்று 06




வடக்கே விஜயம் செய்த ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க ஒரு விடயம் குறித்து மலைத்திருக்கின்றார். அது பற்றிய உள்வீட்டுத் தகவலைத்தான் விவரங்களுடன் இன்று பகிரப் போகிறேன்.

இம்முறை ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது காணி உறுதிகள் வழங்கல் மற்றும் வைத்தியசாலைகளின் பிரம்மாண்டமான கட்டுமானங்கள், ஆய்வு கூடங்கள், வைத்திய மையக் கட்டமைப்புகள் போன்றவற்றைத் திறந்து வைப்பதுதான் பிரதான நிகழ்வுகள்.

முதல் கட்டம் யாழ் 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# உயர்தர சுகாதார சேவைகளுடன் வட மாகாணம் மேம்படுத்தப்படும்!

## மாங்குளம் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

“2017ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது வடமாகாண சுகாதார சேவையை மேம்படுத்தவதற்காக என்னால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இன்று மக்களிடம் கையளிக்க முடிந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வைத்திய புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் 4500 மில்லியன் ரூபா செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இது வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் என்பதோடு மனநல மறுவாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

“இந்த மருத்துவப் பிரிவை இன்று திறந்து வைக்கும் போது இதன் பின்னணியைக் குறிப்பிட வேண்டும். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர், யுத்தம் காரணமாக வடமாகாணத்தில் தடைப்பட்ட சேவைகளை மீளமைப்பதற்கான அடிப்படைப் பணிகளை அப்போதைய அரசாங்கம் ஆரம்பித்தது.

முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்த நிலையில், இந்தப் பிரிவுகள் அனைத்தின் முன்னேற்றத்துக்கு, இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும். அதற்கிணங்க, வடமாகாணத்தில் சுகாதாரத் துறையின் மேம்பாட்டிற்காக புதிய மருத்துவப் பிரிவுகளை நிறுவுவதற்கு பிரதமர் என்ற ரீதியில் நெதர்லாந்து அரசாங்கத்துடன் கலந்துரையாடினேன். அப்போது வடமாகாண சபையில் இருந்த சுகாதார அமைச்சரும், முன்னாள் முதலமைச்சரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

யுத்தத்திற்கு முன்னர், கொழும்புக்கு அடுத்தபடியாக சிறந்த சுகாதார சேவையைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் திகழ்ந்தது. மேல்மாகாணம் அபிவிருத்தியடைந்த நிலையில் தென் மாகாணமும் மத்திய மாகாணமும் அபிவிருத்தியடைந்தன.

வடக்கு மாகாணத்தை மீண்டும் அந்த நிலைக்கு கொண்டு வருவதே எனது நோக்கமாகும். அதனால்தான் இந்த மருத்துவமனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

அத்துடன், 2017ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவுவதற்கும், அதற்கு தேவையான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் நான் பிரதமராக இருந்து பணத்தை ஒதுக்கினேன். இன்று இந்த திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இந்தப் பணிகள் உடனடியாக நிறைவு செய்ய வேண்டும் என்று பணித்தேன். இப்போது வடக்கு மாகாணத்தில் நவீன மருத்துவமனைகள் உள்ளன.

யாழ்ப்பாண வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்ற தீர்மானித்தோம். மேலும் மன்னார் வைத்தியசாலையைஅபிவிருத்திசெய்யப்படும்அதேவேளைவவுனியாவைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக

03












# உயர்தர சுகாதார சேவைகளுடன் வட மாகாணம் மேம்படுத்தப்படும்!

## மாங்குளம் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு




(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றுவதுடன் வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்று வழங்கப்படும். ராகம வைத்தியசாலைக்குப் பிறகு இந்த நவீன இயந்திரங்களைக் கொண்ட ஒரே வைத்தியசாலை மாங்குளம் வைத்தியசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தம் காரணமாக அங்கவீனமடைந்தவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ராகம வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு ராகம வைத்தியசாலை போன்ற நவீன வைத்தியசாலையை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 04 வைத்தியசாலை பிரிவுகளில் உள்ள உபகரணங்கள் இலங்கையில் உள்ள பல வைத்தியசாலைகளில் இல்லை.

இந்த சாதனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு மருத்துவமனை நிர்வாகமும், மருத்துவமனை முகாமைத்துவமும் முயற்சி எடுக்க வேண்டும். மருத்துவமனை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தின் சிறப்பான நிலை காரணமாக கியூபா சுகாதார சேவைகளில் முன்னணியில் உள்ளது. எனவே, மருத்துவமனை நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் உயர் நிலைக்கு கொண்டு வர பாடுபட வேண்டும்.

அதற்கு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியத்தில் இருந்தும் நிதி ஒதுக்கீடு பெறலாம். இந்தச் செயற்பாடுகள் அனைத்தினூடாகவும் நாட்டில் நம்பிக்கையான சுகாதார சேவையை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்பதையும் கூற வேண்டும்" – என்றார்.









# ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு முன்னெச்சரிக்கை நீடிப்பு



7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, அயகம, கலவான, எஹலியகொட,குருவிட்ட, பலாங்கொடை,கிரியெல்ல, எலபாத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவிற்கும், கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்கை பிரதேச செயலகப் பிரிவிற்கும், கேகாலை மாவட்டத்தின் கேகாலை, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, யட்டியாந்தோட்டை மற்றும் வரகாபொல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# சுங்கத் திணைக்களத்தில் தொழில் வாய்ப்பு மோசடி

சுங்கத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பலர் நிதி மோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகர்கள் மற்றும் சுங்க பரிசோதகர்கள் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன எனத் தெரிவித்து இந்த மோசடியாளர்கள் ஆள்சேர்ப்பில் ஈடுபடும் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோசடியில் ஈடுபடுபவர்கள் விண்ணப்பதாரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பதவிகளைப் பெற்றுத் தருவார்கள் எனக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுங்கத் திணைக்களத்தின் நடைமுறைக்குப் புறம்பாக எந்த அதிகாரிகளையும் உள்வாங்க முடியாது என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கௌதாரி முனை மக்களை நேற்று சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்ப்பிலும் கலந்துரையாடினார்.

# இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கொழும்பில் நேற்றுக் காலமானார்



இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்பிரான்சுவா பேக்டெட் தனது 53 ஆவது வயதில் காலமானார்.

கொழும்பு – ராஜகிரியவில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று பிற்பகல் அவர் காலமானார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திடீர் சுகயீனம் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் எனர் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1970ஆம் ஆண்டு பிறந்த ஜீன் பிரான்சுவா பேக்டெட் (Jean-François Pactet) 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

அனுபவமுள்ள இராஜதந்திரியான அவர் சர்வதேச அனுவம் உள்ள அதிகாரியாகவும் திகழ்ந்தார்.

நீதிவான் விசாரணையின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.


# VACANCY

## For Website & YouTube Media

**Male / Female**

- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

**Qualification -**

Minimum 2 Years Experience
G.C.E. A/L or Relevant Media Qualifications
Fluency in Computer Knowledge

**Send your CV to mail before you contact**

**CONTACT - 0777 739 185**
**Email - lankamedianews@gmail.com**

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆஸ்பத்திரியை ஒட்டி யாழ் பல்கலைக் கழகம் அமைத்த கட்டுமானம். அதன் செலவினம் ஆக 900 கோடி ரூபாதான். அதற்கான திட்டம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசின் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதை இப்போது ஜனாதிபதியாக அவரே வந்து திறந்து வைத்தார்.

இதன் பின்னர் மூன்று வைத்திய சாலை கட்டமைப்புகள். ஒன்று கிளிநொச்சியில். மற்றது மாங்குளத்தில். அடுத்தது வவுனியாவில். இந்தத் தொடரில் பருத்தித்துறையில் ஏற்கனவே ஒரு பிரமாண்டமான கட்டமைப்பு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் பிள்ளையார் பூஜை போடப்பட்டது என்னவோ ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசில்தான். இந்தத் திறப்பு விழா நிகழ்வுகளில் அதனை ரணில் தன்னுடைய சாதனையாகப் பீற்றிக் கொண்டாலும் இவற்றுக்காகத் தான் அப்போது பெரிதும் சிரத்தை எடுத்து அலட்டிக்கொள்ளவே இல்லை, அப்படி இருந்தும் இவை பெருஞ்செலவில் கனகச்சிதமாக நிறைவேறியிருக்கின்றன என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். அதுதான் உண்மையும் கூட.

இந்த நான்கு பெரிய திட்டங்களுக்குமான நிதி உதவியை நெதர்லாந்து தரப்பிலிருந்து புரட்டிக் கொண்டு வந்தவர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம்தான். அவர்தான் தமிழரசுக் கட்சியின் இப்போதைய பொதுச் செயலாளர்.

நான்கு கட்டமைப்புகளுக்குமான செலவினத்தொகை மொத்தம் இரண்டாயிரத்து 400 கோடி ரூபா. இத்துணை பணத்தை மாகாண அரசு வெளிநாட்டிலிருந்து நேரடியாகக் கொண்டுவர கொழும்பு மத்திய அரசு அனுமதிக்காது என்ற காரணத்தை காட்டி, முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆரம்பத்தில் இத்திட்டத்திற்கு முரண்டு பிடித்து முட்டுக்கட்டை போட்ட போது, அதை வெட்டி ஆடிக் காரியத்தை சாதித்தவர் சத்தியலிங்கம்தான்.

அப்போது நல்லாட்சி அரசில் சுகாதார அமைச்சராக இருந்த மருத்துவர் ராஜித சேனரத்னதை அவர் தமக்கு ஜோடியாகக் கூட்டுச் சேர்த்துக் கொண்டார். இரண்டு மருத்துவர்களும் சேர்ந்து நடத்திய பகீரதப் பிரயத்தன முயற்சியால் நான்கு பெரிய திட்டங்களும் இன்று விஸ்வரூபம் எடுத்து கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

நெதர்லாந்தின் 2,400 கோடி ரூபாவில் 35 வீதம் நெதர்லாந்து அரசின் அன்பளிப்பு. மிகுதி 65 வீதமும் ஆக 0.01 வீத வட்டி அடிப்படையிலான கடன்.

இந்தக் கட்டமைப்புக்களை ஒவ்வொன்றாக வந்து திறந்து வைத்தபோது பிரமித்துப்போன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் நதி மூலம் ரிஷி மூலத்தைத் தேட ஆரம்பித்திருக்கிறார்.

முதல் கட்டடம் பருத்தித் துறையில் சில மாதங்களுக்கு முன்னர் திறக்கப்பட்ட போது, பார்வையாளர் வரிசையில் இருத்தப்பட்ட டாக்டர் சத்தியலிங்கத்திற்கு, இப்போது இந்த மூன்று கட்டமைப்புகளும் திறக்கப்பட்ட போது மேடையில் இடம் அளிக்கப்பட்டது. கடைசியில் பொன்னாடை போர்த்து கௌரவிப்பு வேறு.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்று வடக்கின் முக்கிய அரசியல் தலைவர்கள் இத்திட்டங்களின் பின்னணியில் அமைந்த உண்மைகளை – மூலவுருவை – சிலாகித்து இந்நிகழ்வுகளில் பேச, வடக்கு ஆளுநரிலிருந்து ஜனாதிபதி வரை மேடையில் உண்மையைக் குறிப்பிட்டு மருத்துவர் சத்தியலிங்கத்தை பாராட்டிப் பேச வேண்டியதாயிற்று.

கடைசியாக நேற்று வவுனியா நிகழ்வை முடித்துக் கொண்டு மேடையில் இருந்து புறப்படத் தயாரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திரும்பி மருத்துவர் சத்தியலிங்கத்தை அழைத்தார். அவருடன் நடந்தபடி மனம் திறந்து உரையாடினார்.

"வடக்கின் சுகாதார அபிவிருத்திக்குப் பல திட்டங்களைத் தயார் செய்து வைத்திருக்கின்றீர்களாம். அந்த வரிசையில் அடுத்து உங்களிடம் இருப்பது என்ன திட்டம்?" – என்று நேரடியாகக் கேட்டிருக்கிறார் ஜனாதிபதி.

"நீங்கள் கூட இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலையாகத் தரம் உயர்கின்றது, அந்தச் சூழ்நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியை போதனா வைத்தியசாலையாக உயர்த்த வேண்டும் என்றீர்கள். எங்கள் விருப்பமும் அதுதான். வவுனியா ஆஸ்பத்திரி போதனா வைத்தியசாலையாவதயின் அதற்கு ஒரு மருத்துவ பீடம் அவசியம். வவுனியாப் பல்கலைக்கழகத்தில் ஒரு மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போன்ற திட்டங்களைத் தயாரித்து வைத்திருக்கிறேன்" – என்ற சாரப்பட சுருக்கமாக விளக்கமளித்திருக்கிறார் மருத்துவர் சத்தியலிங்கம்.

திறமையை அடையாளம் கண்டு கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விரைவில் அவற்றை கொண்டு வந்து என்னுடன் கொழும்பில் விரிவாகக் கலந்தாலோசியுங்கள் என்று மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு 'அன்புக் கட்டளை' போட்டுவிட்டுப் புறப்பட்டிருக்கின்றார்.

மருத்துவர் சத்தியலிங்கத்தின் வைத்திய அபிவிருத்தித் திட்ட இலக்கை ஒட்டி தாமும் ஒரு விடயத்தை கண்டுபிடித்து, நிகழ்வில் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் ஜனாதிபதி.

இந்தத் திட்டங்களில் முறையே வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் (பருத்தித்துறை) என்ற வரிசையில் சுகாதார மருத்துவத்துறை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. இது வவுனியாவிலிருந்து வடக்கே கண்டி வீதியில் செய்யப்பட்ட வைத்தியத்துறை மேம்பாடு என்று சிலாகித்திருக்கின்றார் ரணில்.

ஜனாதிபதி பங்கு பற்றிய வடக்கு நிகழ்வையொட்டிய இன்னும் இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளன. அவற்றை நாளை பார்ப்போம்.

## அடித்தாடுவதா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துவிட்டேன். எனவே, அடித்தாடுவதா? தவறான முடிவெடுத்து ஆட்டமிழப்பதா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜூன் 15 ஆம் திகதிக்குப் பிறகு நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளது எனவும், ஜனாதிபதி மற்றும் பஸில் ராஜபக்ஷவுக்கிடையில் இது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது எனவும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க விடுத்துள்ள அறிவிப்பு மொட்டுக் கட்சிக்குள்ளேயே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் சிலர் பஸில் ராஜபக்ஷவைச் சென்று சந்தித்து, இது தொடர்பில் வினவியுள்ளனர்,

"சேர், நாடாளுமன்றத் தேர்தல் முதலில் நடக்குமென்றால் எங்களுக்கும் சொல்லி விடுங்கள். வேலையை ஆரம்பிக்க வேண்டும்." – என்று அவர்கள் கூறியுள்ளனர்.

"எனக்கு அது பற்றி தெரியாது. சில வேளை ரணிலின் தகவலை உதயங்க வெளியிட்டிருக்கலாம். தற்போதைய சூழ்நிலையில் அரசியல் களத்தில் எவ்வாறு ஆட வேண்டும் என்பது பற்றி ரணிலுக்கு விளக்கிவிட்டேன். இனி முடிவெடுக்கும் அதிகாரம் அவரிடம்தான் உள்ளது." – என்று பஸில் ராஜபக்ஷ, மேற்படி உறுப்பினர்களுக்குப் பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியிடம் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டமா அதிபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், பதவி நீடிப்பு செய்யப்படவில்லையெனில் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஜூன் 27ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய எதிர்வரும் டிசம்பர் மாதம் ஓய்வுபெறவுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக சஞ்சய் ராஜரத்தினத்தை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையினால், சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை ஆறு மாதங்கள் நீடித்து, பின்னர் அவரைப் பிரதம நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தங்களின் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருகை தந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மாவட்டத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை உங்களால்தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கின்றது.

இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவை உங்கள் தலைமையில் நடத்தி முல்லைத்தீவுமாவட்டமக்களின்காணிஉள்ளிட்டபிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எங்களுடைய மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன்." – என்றார்.

## சிங்களத் தலைவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கௌதாரிமுனை மக்களை நேற்று சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது என்று குறிப்பிட்டுள்ளதை மேற்கோள்காட்டி கருத்துரைத்த சிறீதரன் எம்.பி., "தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் தயாரில்லை. சிங்களத் தலைவர்கள் ஈழத்தமிழர்களை எடுப்பார் கைப்பிள்ளைகளாக பயன்படுத்த நினைக்கும் மனோநிலையிலிருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவைக் குச் சாத்தியமேயில்லை" – என்றார்.

# கேப்பாப்பிலவு காணி பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்ற போது ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், கல்லூரி முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அறிந்த வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை என்னவென்று வினவ, அதன்போது அவர்களின் பிரச்சினையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

அதனையடுத்து, வடமாகாண ஆளுநரால் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

காணிப் பிரச்சினை காரணமாக தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும்



அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், இதற்கு உடனடியாக தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் அந்தப் பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளார் எனத் தெரிவித்தார்.

அத்துடன், வடமாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் கலந்துகொண்ட தம்மை சந்தித்து, தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு, போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கொழும்பு - கண்டி வீதி நாளை மூடப்படவுள்ளது

கொழும்பு – கண்டி பிரதான வீதியின், கீழ் கடுகண்ணாவை பகுதி நாளை மூடப்படவுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள ஆபத்தான கற்பாறைகள் அகற்றப்படவுள்ளதன் காரணமாக மேற்படி பகுதி மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை 2 மணித்தியாலங்களுக்கு அந்தப் பகுதி மூடப்படவுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.



# கிராண்ட்பாஸ் கொலை; 3 இளைஞர்கள் கைது!

கொழும்பு – கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேஸ்லைன் வீதி – பண்டாரநாயக்க சுற்றுவட்டம் அருகில் நேற்று முன்தினம் அதிகாலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

பேலியகொடையை சேர்ந்த 22 வயதான இளைஞரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 17 மற்றும் 18 வயதான மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறே கொலைக்கான காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அவியாது அபிவிருத்திப் பருப்பு

வடக்கு மக்கள் குறித்து - குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்கள் குறித்து - தமது வட பகுதி விஜயத்தின் போது பல விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றார்.

தமது வடக்கு விஜயத்தில் காணி உறுதி வழங்கும் விவகாரமும் முக்கியமானதாக இருந்தமையால் அது குறித்த பிரஸ்தாபித்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

நடந்து முடிந்த பேரழிவு யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் வன்னி மண்தான். முள்ளிவாய்க்கால் வரை அந்தப் பேரழிவு தொடர்ந்து, அது முற்றுப்பெற்று, 15 வருடங்கள் முடிந்து விட்டன.

அந்தப் பேரழிவின் மையமான முல்லைத்தீவு மாவட்டத்தில் வந்து நின்று, யுத்தப் பாதிப்புக் குறித்தும், காணி உறுதியளிப்பு பற்றியும்யும் நீட்டி முழக்கி இருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

“யுத்தம் காரணமாக இப்பிரதேசத்தில் கட்டடங்கள் அழிந்து போனமையுடன் பலர் தமது காணிகளை விட்டு வெளியேற வேண்டியும் ஏற்பட்டது. அதனால்தான் இங்கு காணி உறுதிக் கையளிப்பு பிரதானமாகஇடம்பெறுகின்றது”என்றதமதுதத்துவமுத்தை உதிர்த்திருக்கின்றார் நாட்டின் அதி உத்தமர்.

யுத்தத்தால்நேரடியாக-மோசமாக-பாதிக்கப்பட்டவன்னிமக்களுக்குமுதலில்தேவைப்படுவது அபிவிருத்தியும் காணி உறுதிப் பத்திரமும் அல்ல.

முதலில் அவர்களுக்கு தேவைப்படுவது தங்களுக்கும் தங்கள் உறவுகளுக்கும் எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் பேரழிவுகள் தொடர்பில் நீதி. கொல்லப்பட்ட - பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட - தமது பல்லாயிரம் உறவுகளுக்கு நேர்ந்த கதி தொடர்பான உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தண்டனை விலக்களிப்பு என்ற பேரினவாத மேலாதிக்க அடக்குமுறை முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அவைதான் முதலாவது முக்கியம். மற்றெல்லாம் பிறகுதான்.

மீள்குடியேற்றமும், அபிவிருத்தியும், காணி உறுதிக் கையளிப்பும் தேவைதான். ஆனால் அதற்கு முந்தைய - முக்கியமான - பிரதானமான - பொறுப்பை நிறைவேற்றாமல், அதை மூடி மறைத்துக் கொண்டு மீள்குடியேற்றம், நிலக் கையளிப்பு என்று நாடகம் நடத்தும் பேரினவாத மேலாதிக்க ஆளுகை முறைமை குறித்துத் தமிழ் மக்கள் நன்கறிவர்.

தம் வாழிட நிலத்துக்கான உறுதி தங்கள் பெயரில் கிட்டுவதை நாட்டின் முழு மக்களும்தான் வரவேற்பர். ஆனால், வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை - குறிப்பாக வன்னி மக்களைப் பொறுத்தவரை பேரினவாத மேலாதிக்க அடக்குமுறை ஆளுகையிலிருந்து தங்கள் தாயக நிலத்தை முற்றாக விடுவிக்கும் விடுதலைதான் பிரதானமானது, அதன் பின்னர்தான் நில உறுதி பெறும் விடயம்.

நீதி வழங்குவதிலும், நிலங்களை விடுவிப்பதிலும், முதலாவது பிரதான விடயத்தை மறைத்துக் கொண்டு - மறித்துக்கொண்டு-அதற்குஅடுத்தகட்டவிடயம் தொடர்பில் தமிழர் தாயகம் மண்ணில் வந்து நின்று கொண்டு ஆரவாரம் பண்ணுகின்றார் சிங்கள - பௌத்த தேசத்தின் தலைவர்.

தங்கள் தாயக மண்ணின் விடுதலையைத் தங்களின் வேணவாவாகக் கொண்டு போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களிடம், அபிவிருத்தி என்ற மாயமானைக் காட்டி காரியமாற்ற - சாதிக்க - பார்க்கின்றார் நரித் தந்திரசாலியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கொடூர யுத்தத்தை தமிழர் தேசம் மீது திணித்து, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பேரழிவையும் போர் நலிவுகளையும் ஏற்படுத்தி, பௌத்த - சிங்கள வெறிப்போக்கு ஆட்சி பீடம் அந்த மக்களுக்கு நீதி செய்யும் அடிப்படை கோட்பாட்டை, கோட்டை விட்டு விட்டு, அபிவிருத்தி, நிலஉறுதிவழங்கல்என்றுகாதில்பூச்சுற்றும் வேலையை முன்னெடுக்கின்றது என்பது திண்ணம்.

இந்தப் பாச்சா - பருப்பு - தமிழர் தம் மனதில் அவியாது என்பது சிங்களத்துக்குப் புரிய வேண்டும்.

# இந்தியாவில் இரு நாள்களில் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி 54 பேர் உயிரிழப்பு





இந்தியாவின் சில பகுதிகளில் கடந்த இரு நாள்களுக்குள் ஏற்பட்ட வாகன மற்றும் தீ விபத்துக்களில் சுமார் 54 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் உத்தரபிரதேசம் – சாஜகான்பூரில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸுடன், கனரக வாகனம் ஒன்று மோதியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில், பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது, மூன்று மணி நேரம் நீடித்த மீட்பு நடவடிக்கைக்குப் பின்னரே பல உடல்கள் கனரக வாகனத்தின் கீழ் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குஜராத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 37 பேர் வரை பலியாகினர். டில்லியின் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 7 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டில்லியில் பறவை மோதியதன் காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்ட விமானம்





டில்லியில் இருந்து 135 பேருடன் லடாக் நோக்கிப் புறப்பட்ட ஸ்பைஸ் ஜெட் விமானம் டில்லி விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

அந்த விமானத்தின் மீது பறவை ஒன்று மோதியதன் காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இதே வாரத்தில் டுபாயில் இருந்து மும்பை நோக்கி சென்ற போயிங் 777 விமானத்தில் மோதி, 39 ஃபிளமிங்கோ பறவைகள் உயிரிழந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்ப்பால் விற்பனைக்கு அனுமதி இல்லை: உணவுப் பாதுகாப்பு ஆணையம் அறிவிப்பு

"தாய்ப்பாலை பதப்படுத்தவோ அல்லது விற்கவோ அங்கீகாரம் அளிக்கவில்லை. எனவே, அதற்கான உரிமங்களை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்."

– இவ்வாறு மாநில அரசுகளுக்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுரையில்,

"உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006 விதிகளின் கீழ் தாய்ப்பாலை பதப்படுத்துதல் அல்லது விற்பனை செய்ய அனுமதியில்லை. எனவே, தாய்ப்பால் மற்றும் அதுதொடர்புடைய பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். விதிகளை மீறினால் விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தாய்ப்பாலை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள உணவு வணிகங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் உரிமம் வழங்கக்கூடாது. இதனை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

பொதுச் சுகாதார பாலூட்டும் மையங்கள் வழிகாட்டுதல்களின்படி, தாய்ப்பாலை எந்தவொரு வணிக நோக்கத்துக்கும் பயன்படுத்த முடியாது. சிசுக்களுக்கு மட்டுமே இது வழங்கப்பட வேண்டும்." – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இன்ஸ்டாகிராம் உட்பட ஒன்லைன் மூலம் தாய்ப்பால் விற்பனை தற்போது அமோகமாக நடைபெற்று வருவதாக சமீபகாலமாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் தான் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

# பப்புவா நியூ கினியாவில் பாரிய மண்சரிவு: பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு





பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை 700 ஆக அதிகரிக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது, ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் 640 பேர் உயிரிழந்துள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென் பசுபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் சுமார் 670 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி செர்ஹான் அக்டோப்ராக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள தகவலிலேயே குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது 150இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 670இற்கும் மேற்பட்ட மக்கள் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதேவேளை, குறித்த பகுதியில் தண்ணீர் வழிந்தோடுவதுடன் நிலம் சரிவது தொடர்வதனாலும் பாரிய ஆபத்து ஏற்படலாம்.

மேலும், இந்த கிராமத்திலிருந்து 1,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அது மாத்திரமன்றி, அப் பகுதியிலுள்ள உணவுத் தோட்டங்கள் மற்றும் நீர் விநியோகங்கள் ஆகியன முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளன” என குறிப்பிட்டுள்ளார்.

# வானில் திடீரென குலுங்கிய கட்டார் ஏர்வேஸ் விமானம்

## 12 பேர் காயம்

கட்டார் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் நடுவானில் திடீரென குலுங்கியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கியூ.ஆர்.17 என்ற விமானம் கட்டார் நாட்டின் டோஹா நகரில் இருந்து டப்ளின் நகருக்கு புறப்பட்டு சென்ற நிலையிலே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது விமானத்தில் பயணித்த ஆறு பயணிகள் மற்றும் ஆறு ஊழியர்கள் என 12 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து விமானத்தில் காயமடைந்த 12 பேருக்கும் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதுடன் டப்ளின் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியதும் அவசர சேவைகள் வழங்கப்பட்டன என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




துருக்கி வான்வெளியில் பறந்து கொண்டிருந்த போது விமானம் பலத்த குலுங்கலுக்கு உள்ளானதாக குறிப்பிடப்படுகிறது.

அண்மையில் லண்டனில் இருந்து சிங்கப்பூர் நோக்கி சென்ற விமானம் இதேபோன்று நடுவானில் குலுங்கிய போது அதில் பயணித்த 73 வயது முதியவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜனாதிபதி ரணிலின் வருகையையடுத்து வவுனியாவில் மூன்று அடுக்குப் பாதுகாப்பு

(கே.வசந்தன்)


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையையடுத்து வவுனியாவில் மூன்று அடுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டபின் நேற்றுவவுனியாவுக்கு வருகை தந்திருந்தார்.

வவுனியா பொது வைத்தியசாலை, மாவட்ட செயலகம் என்பவற்றுக்குச் சென்ற ஜனாதிபதி பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள், பிரதான வீதிகள் என்பவற்றில் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், பொலிஸார் என மூன்று அடுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கலகம் அடக்கும் பொலிஸார், நீர் விசிறும் வாகனம் என்பனவும் தயார் நிலையில் விடப்பட்டிருந்தன.
















# ‘யாழில் பனைத்திருவிழா’

‘யாழில் பனைத்திருவிழா’ எனும் தொனிப்பொருளில் சுழிபுரம் திருவடிநிலையில் நேற்றுக் காலை முதல் விசேட செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பனை சார் உணவு பொருள்கள் உற்பத்தி நிகழ்வு, பனை சார் உரையாடல், நாடகங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதில் அதிகளவான சுற்றுலாவிகள் கலந்து பயன் பெற்றார்கள். இதன் பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மற்றும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.














# முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

## புதுக்குடியிருப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

"முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் என்பது பாரிய செயற்பாடாக மாறியுள்ளது. எனவே, இந்தப் பிரதேசத்தில் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு முழுமையான காணி உறுதிப் பத்திரம் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற வவுனியா மாவட்ட 'உறுமய' காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 600 முழுமையான காணி உறுதிப் பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டமையோடு, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் 1,376 இலவசப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"ஜனாதிபதி என்ற வகையில் இன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் வாய்ப்பு கிடைத்தமைக்கு முதலில் எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். உறுமய காணி உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு முக்கியமானது.

யுத்தம் காரணமாக இப்பிரதேசத்தில் கட்டடங்கள் அழிந்து போனமையுடன் பலர் தமது காணிகளை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் என்பது பாரிய செயற்பாடாக மாறியுள்ளது. எனவே, இந்தப் பிரதேசத்தில் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு முழுமையான காணி உறுதிப் பத்திரம் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதன் கீழ் சுமார் 18 ஆயிரம் பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என காதர் மஸ்தான் என்னிடம் தெரிவித்தார். அதற்கான ஆவணங்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இந்நடவடிக்கைகளுக்காக காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் நில அளவைத் திணைக்களத்திற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு நான் அண்மையில் அனுமதியளித்தேன்.

இந்நாட்டில் முதன்முறையாக 20 லட்சம் முழுமையான காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கும் உறுமய வேலைத்திட்டம் மிகவும் முக்கியமான ஒரு வேலைத்திட்டம் என்றே கூற வேண்டும். இந்த நிலங்களில் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தபோதும் விவசாயம் செய்து வந்தாலும் அந்த மக்களுக்கு காணியில் உரிமை இருக்கவில்லை.

இந்நாட்டின் அனைத்து இனங்களையும் சேர்ந்த பெருமளவிலான மக்கள் நாட்டின் விவசாயத்திற்கு பங்களிப்பு

தொடர்ச்சி▼
















# முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

தொடர்ச்சி▲

செய்த போதிலும் அவர்களுக்கு காணி உரிமையை வழங்க முடியவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது இது தொடர்பில் நான் சட்டம் கொண்டு வந்த போது அதற்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்றனர். ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு காணி வழங்கும் அதிகாரம் இருந்தது. ஆனால் புதிய சட்டங்களை நிறைவேற்றாமல், நீதிமன்றத்திற்கு செல்லாமல் வெள்ளையர்கள் நிலத்தை கையகப்படுத்திய அதே சட்டத்தின் கீழ் நாட்டு மக்களுக்கு முழுமையான காணி உரிமை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்த நிலங்கள் உங்களுக்குரியவை. உங்களின் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகள் விவசாயம் செய்து வந்த நிலம் இப்போது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படியானால், இது நாட்டில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய தனியார்மயமாக்கலாகும். தெற்காசியாவில், நம் நாட்டில் மட்டுமே இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாபெரும் புரட்சி மற்றும் இரத்தம் சிந்திய பின்னரே பொது மக்களுக்கு நில உரிமை கிடைக்கிறது. நாம் புரட்சி இல்லாமல் இந்தப் பணியைச் செய்துள்ளோம்.

மேலும், மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ளோம். தமது பிள்ளைகளுக்கு காணி வழங்கும் வாய்ப்பை வழங்கியுள்ளோம்.

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நாட்டு மக்கள் 04 வருடங்களாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அந்தக் கஷ்டத்தை அவர்கள் அமைதியாக அனுபவித்தனர். தற்போது பொருளாதாரம் நல்ல நிலையை எட்டியுள்ளது. இனிமேலாவது நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைய வேண்டும். எனவே, இதன் நன்மையை ஒரு சிலருக்கு மட்டுப்படுத்த முடியாது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுப்பதற்காக உங்களுக்கு இந்த நில உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. அஸ்வெசும பயனாளிகளுக்கு சமுர்த்தி திட்டத்தைப் போன்று மூன்று மடங்கு பலன்கள் கிடைக்கும். மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிங்கள தமிழ் புத்தாண்டு மற்றும் வெசாக் பண்டிகைக்கு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

நாடு முன்னேற்றமடைந்திருந்த சமயத்தில் அரசாங்கம் மக்களுக்கு இதனை வழங்க முடியவில்லை. வங்குரோத்தடைந்த சமயத்தில் இந்த சலுகைகளை மக்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்பதுடன், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அந்த நிபந்தனைகளை சட்டமாக்க எதிர்பார்ப்பதோடு, அதற்கான சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றி போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும். அதற்காக நாடாளுமன்றத்தில் பொருளாதார பரிமாற்றச் சட்டத்தை நிறைவேற்ற அனைவரும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."– என்றார்.









# சீரற்ற காலநிலையால் 45,509 பேர் பாதிப்பு

## 8 பேர் மரணம்; 13 பேர் காயம் 3ஆயிரத்து 166 வீடுகள் சேதம்

சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 19 மாவட்டங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 509 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்கள் காரணமாக 8 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், கடும் காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் 12 வீடுகள் முற்றாகவும் 3 ஆயிரத்து 166 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக, அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே பாதிக்கப்பட்டுள்ளனர்.மேல் மாகாணத்தில் மாத்திரம் 28 ஆயிரத்து 350 பேர் பாதிப்படைந் துள்ளனர்.


அத்துடன், அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த 2 ஆயிரத்து 248 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

# தீவிரமடைகிறது 'றீமால்' சூறாவளி; இலங்கை மக்களுக்கு எச்சரிக்கை

கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் நிலவிய தாழமுக்கம் தற்சமயம் சூறாவளியாக விரிவடைந்துள்ளது.

'றீமால்' என பெயரிடப்பட்டுள்ள இந்த சூறாவளி வடக்கு திசையாக பயணித்து பங்களாதேஷ் மற்றும் அதனை அண்மித்த கிழக்கு வங்காள விரிகுடா கரையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் தென் கிழக்கு அரபிக்கடல் பகுதியிலும் மணித்தியாலத்திற்கு 60 - 70 கிலோ மீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் எனவும் நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதி மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.



எனவே, கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சபரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல், வடமேல் மாகாணங்களிலும் கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லிமீற்றர் அளவான மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# மட்டு. மாநகரசபையின் காணிகள் குத்தகை என்ற பெயரில் மோசடி!

## விசாரணை வேண்டும் என்கிறார் மக்கள் முன்னணி அமைப்பாளர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாநகரசபைக்கு சொந்தமான காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கல் என்ற அடிப் படையில் பாரிய மோசடி இடம் பெறுகின்றது என மக்கள் தெரியப் படுத்துகின்றனர். எனவே இந்த மோசடி தொடர்பாக விசாரணை வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றைய ஞாயிற் றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாநகரசபைக்குச் சொந்தமாக காணிகளை குத்தகைக்கு கொடுக்கின்ற விடயத்திலே மாநகரசபை ஆணை யாளர் மற்றும் கிழக்கு மாகாண ஆளு நரும் இருக்கின்றனர்.

எந்தவொரு அரச காணிகளையும்



வைத்துக் கொள்ளாமல் கொடுங்கள் என கிழக்கு மாகாண ஆளுநர் மிகத் தெளிவாக கருத்து தெரிவித்துள்ளார் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே இப்படிப்பட்ட செயற்பாட்டின் மூலம் மறைமுகமாக மோசடி ஒன்றை நடாத்துகின்றார்களா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆகவே இது தொடர்பாக விசாரணை மேற்கொள் ளப்பட்டு பரிகாரம் பெறப் படவேண்டும்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தனின் அதிகாரத்தை பயன்படுத்தி கதிரை ஏறிய சில அதிகாரிகள் மாவட்டத்திலுள்ள எல்லா அரச திணைக்களங்களில் தமது கடமையைச் சீராகச் செய்வதில்லை. மாறாக அவர்களுக்கு கூலிக்கு மாரடிக் கின்றவர்களாகவே இருக்கின்றனர்.

கல்வியாக இருந்தாலும் சரி, வேறு துறைகளாக இருந்தாலும் சரி, அவரது தலையீடு இருக்கின்றது. அதேவேளை கல்வியிலே இவரின் தலையீடு கூடுத லாக இருக்கின்றது. எனவே கல்வியை பொறுத்தமட்டில் எந்த ஓர் அரசியலும் இருக்க கூடாது. அதற்குரிய வழங்கல் வழங்கப்படவேண்டுமே தவிர, கல்விக்குள் அரசியல் போகுமாக இருந் தால் சிறந்த கல்வியை பெறமுடியாது என்பதை மக்கள், அதிகாரிகள் உணர வேண்டும். - என்றார்.





# வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் யானையுடன் மோதி தடம்புரண்ட ரயில்

(கே.வசந்தன்)

வவுனியா, கனகராயன்குளம் காட்டு பகுதியில் யானையுடன் மோதி ரயில் தடம்புரண்டுண்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற ரயில் கனகராயன்குளம் காட்டு பகுதியில் ரயில் பாதையை ஊடறுத்துச் சென்ற யானை மற்றும் யானை குட்டியில் மோதுண்டுள்ளது.

இதன்காரணமாக, யானை சம்பவ இடத்திலே பலி யாகியுள்ளது. யானைக் குட்டி காயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் மீட்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கொண்டு செல்லப்பட்டது.

விபத்துக் காரணமாக நான்கு மணி நேரத்தின் பின்னர் சம்பவ இடத்தில் இருந்து பிறிதொரு ரயில் சேவை ஊடகவே பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# மார்ச்-12 இயக்க கலந்துரையாடல் கிளிநொச்சியிலும் இடம்பெற்றது

(த.சுபேசன்)

'தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்' எனும் தொனிப் பொருளில் மார்ச்-12 இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்டத்தினரின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் உள்ள தனியார் விடுதியில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது.

மேற்படி கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோருடன் பொது அமைப்புக்களின் பிரதிநிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது தூய்மையான அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவது எவ்வாறு? என்பது தொடர்பான ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# ஜனாதிபதிக்கு வவுனியாவில் எதிர்ப்புக் காட்டிய தாய்மார்!

(கே.வசந்தன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வவுனியா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கறுப்புக் கொடி காட்ட முயற்சி எடுக்கப்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா வைத்தியசாலை மற்றும் மாவட்ட செயலகம் என்பவற்றுக்கு நேற்றுப் பிற்பகல் வருகை தந்தார். மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை சேர்ந்த தாய்மார் சிலர் ஜனாதிபதியின் வருகைக்கு கறுப்பு கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது அங்கு மேலதிக பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு அந்தத் தாய்மார் வீதிக்கு இறக்க விடாது தடுக்கப்பட்டனர். சிறிது நேரத்தின் பின் மாவட்ட செயலக வாயிலுக்கு செல்ல முற்பட்ட தாய்மாரை பொலிஸார் வழிமறித்து அங்கிருந்து அவர்களை வெளியேற்றி இருந்தனர். இதன்காரணமாக, மாவட்ட செயலகம் முன்பாக ஜனாதிபதியின் கூட்டம் முடியும் வரை பரப்பான நிலைமை காணப்பட்டது.



















# காலநிலை சீர்கேட்டினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்த்தார் ஜீவன்

**(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)**

காலநிலை சீர்கேட்டினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்.

நாட்டில் நிலவும் சீர்ரற்ற காலநிலை காரணமாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுக அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது போகாவத்த அக்கரபத்தனை போடைஸ் இன்ஞஸ்ரீ சாஞ்சி மலை மற்றும் பொகவந்தலாவ பகுதியில் டியன்சின் கெம்பியன் பெற்றோசோ ஆகிய பகுதிகளுக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்

இதேவளை பெருந்தோட்ட தொழிலாளர்களை சந்தித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் 1,700 ரூபா சம்பளம் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்திற்கு அவர் பணிப்புரை விடுத்தார்

இந்த நேரடிச் சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், நீர் வழங்கல் மற்றும் அம்பகமுவ பிரதேசத்திற்கான இனைப்பாளர் ரவி குழந்தைவேல், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினர்.









# ஜனாதிபதி ரணிலின் வடக்கு விஜயத்தின் போது பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு இடமில்லை

**(வவுனியா நிருபர்)**

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது வடக்கு மாகாண பிராந்திய ஊடகவியலார்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என நான்கு மாவட்டங்களிலும் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் மூன்று தினங்களாகக் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது ஜனாதிபதி செயலகத்தால் தெற்கில் இருந்து அழைத்து வரப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் நிகழ்வுகளில் செய்தி அறிக்கையிட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஊடக அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை கொண்டிருந்த வடக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு நிகழ்வுகளுக்கு செல்வதற்கும், செய்தி அறிக்கையிடவும் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் வடக்கில் ஜனாதிபதி சென்ற இடங்களில் உள்ள பிராந்திய ஊடகவியலாளர்கள் ஜனாதிபதியின் நிகழ்வு நடைபெற்ற இடங்களுக்கு வெளியே நீண்ட நேரம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆறுமுகம் தொண்டமானின் நான்காவது சிரார்த்த தினம்

(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் 4 ஆவது சிரார்த்த தினம் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு கொழும்பில் உள்ள சௌமியபாவானில் விசேட பூசைவழிப்பாடுகள் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் படங்களின் கண்காட்சியும் இடம் பெற்றன.

இதன்போது அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாரியார் ராஜலெட்சுமி தொண்டமான், இ.தொ.காவின் சட்ட ஆலோசகர் மாரிமுத்து, பிரதித் தலைவர்களான அனுஷாயா சிவராஜா, கனகராஜ், தேசிய அமைப்பாளர் சக்திவேல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுரை உட்பட இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துக் கொண்டனர்.











# ஊடகவியலாளர் கபிலநாத்தின் யாத்திரை நூல் வெளியீட்டு விழா

வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத்தின் யாத்திரை நூல் கடந்த வெள்ளியன்று மாலை வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 231 ஆவது பௌர்ணமி கலைவிழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மனித உரிமை செயற்பாட்டாளரும் தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரையும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை க. அகரனும் வரவேற்புரையை க. அட்சகி யும் ஆற்றினர். நிருத்தியார்ப்பன நடனக்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெற்றிருந்தது.

இநிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்சன் சிறப்புரை ஆற்றினார். நூல் விமர்சனத்தை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் வழங்கினார்.

நூலில் தமிழர் அரசியல் களம், அரசியலாளர்களின் நிலைப்பாடுகளும் மக்களின் நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய அரசியல் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளமையோடு இது நூலாசிரியரின் இரண்டாவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

























# இன்றைய ராசி பலன்கள் - 27.05.2024




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்துக்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக் கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 27-05.2024




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும்.இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





